[2003 ஏப்ரல் 22

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட புதுக்குளக்கரையில் மிருகக்காட்சி சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(2) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட புதுக்குளக்கரையில் மிருகக்காட்சி சாலை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை. இப்பகுதியில் மிருகக்காட்சி சாலை அமைப்பதற்குத் தற்போது சாத்தியக்கூறு இல்லை.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம், (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேலூர் மாவட்டத்தில் காட்பாடி, கழிஞ்சூர் ஏரியாவிலே நேற்றுக்கூட இரண்டு கொலைகள், கொள்ளைகள் நடந்திருக்கின்றன. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறைக்கு வாருங்கள். (குறுக்கீடு) பிரச்சினையை எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம்.